



SAKTHI PURA
Areas
POLLACHI
NIA EDUCATIONAL INSTITUTIONS


சமுதாய நலக்கூடம்


அரசினர் உயர் நிலைப் பள்ளி, கஞ்சம்பட்டி.
PIN-642003
தமிழக முதலவர் டாக்டர் கலைஞர் அவர்களின்
வருமுன் காப்போம் திட்டம் - மருத்துவ முகாம்
















G.H.S. KANJAMPATTI.


மேதகு குடியரசு தலைவர் A.P.J. அப்துல்கலாம் அவர்களை
அன்புடன் வருக! வருக!! என வரவேற்கும்
-CH76 கஞ்சம்பட்டி ஸ்ரீராமலிங்க சௌடேஸ்வரி
கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம்
கஞ்சம்பட்டி ஊராட்சி மன்ற பொதுமக்கள் மற்றும் நெசவாளர்கள்
SAKTHI PURA
Dr.A.P.J. Abdul Kalam
Providing Urban Amenities in Rural Areas
Dr.N. Mahalingam
Cluster Village : KANJAMPATTI
POLLACHI
Project Implementation by
NIA EDUCATIONAL INSTITUTIONS


அரசு உயர் நிலைப்பள்ளி
கஞ்சம்பட்டி
முப்பெரும் விழா!
19.3.2004
தலைமை ஆசிரியர்
அவர்களது
பணி நிறைவு விழா
குமரன்
பாராட்டு விழா
நாள்: 19.03.2004
நேரம்: பிற்பகல் 2.00 மணி




நாச்சிமுத்து பாலிடெக்னிக் வளாகம்
பொள்ளாச்சி.
சமுதாய பாலிடெக்னிக்
துவக்க விழா
: 16-7-1986
: 10.00 மணி
லைமையும் தொடக்கவுரையும் : திரு. ம.மாணிக்கம். எம்.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தாளாளர்,
நாச்சிமுத்து பாலிடெக்னிக்


நாச்சிமுத்து பாலிடெக்னிக் வளாகம்
பொள்ளாச்சி.
சமுதாய பாலிடெக்னிக்
துவக்க விழா
7.1986
00 மணி
ம் தொடக்கவுரையும்: திரு. ம.மாணிக்கம். எம்.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தாளாளர்,




BHARATH RSITY
N.G.M.



BHAR UNIVERSITY


அரசு ஆரம்ப சுகாதார நிலையம்
கஞ்சம்பட்டி.
காசிப்பட்டணம் K.M. இராமலிங்கம்
நிலம் நன்கொடை 2·25
அன்பளிப்பு
K.R. கல்யாணக்கு
காசிப்பட்டணம்.















NATIONAL SEMINAR
STRENGTHENING SOCIETY-INSTITUTE
INTERACTION FOR MEETING NEEDS OF THE
UNORGANISED RURAL SECTOR
19-20 JULY 1990
T.T.T.I. BHOPAL






TECHNICAL TEACHERS TRAINING INSTITUTE
HOSTEL
तकनीकी शिक्षक प्रशिक्षण संस्था
छात्रावास


உசி போகும் இடம்


TECHNICAL TEACHERS TRAINING INSTITUTE
HOSTEL
तकनीकी शिक्षक प्रशिक्षण संस्था
छात्रावास →


Tamil Nadu Veterinary and Animal Sciences University
Directorate of Research
Madhavaram Milk Colony, Chennai – 600 051
27th Research Council Meeting
Date : 23.07.2018

Let this New year usher in a Golden Era in the history of Tamil Nadu. I send my hearty Pongal Greetings for your happiness and prosperity.

(M. Arunachalam)

Minister of State
Industrial Development
New Delhi, INDIA

அன்புடையீர்,

இப்புத்தாண்டு தமிழகத்தின் பொற்காலத்தின் தொடக்க ஆண்டாக அமையட்டும். நம் அனைவரின் வாழ்வும் வளமும் செழிக்க என் இதயங் கனிந்த பொங்கல் நல் வாழ்த்துக்கள்.

இராஜாங்க தொழில் அமைச்சர்,
மத்திய அரசு,
புது டெல்லி.

மு. அருணாசலம்

Proceedings of the Derector of Animal Husbandry, Madras.6.
Dr. I?D.Manthramurthi, GMVC., BVSc.,

--:--

D.Dis.62997/E2/63, dated 8-5-64.

Sub: Community Development Programme - Pollachi Block Construction of Veterinary Dispendary of Kanjampatti - Approved.

Ref: 1. From the District Veterinart Officer, Coimbatore, letters Roc.No.8339/D/61, dated 24-7-63 8-12-63 and 21-3-64.
2. From the Block Development Officer, Pollachi Ref.3859/64AH, dated 9-3-64.

--:--

The District Veterinary Officer, Coimbatore is informed that his proposals for construction of a Veterinary Dispensary at Kanjampatti from the provision available under Agricultural grant of the Panchayat Union are approved. The Panchayat Union may be permitted to proceed with construction of Veterinary Dispensary building according to type design CA.821/61, with dressing-cum-operation shed and treis in the proposed site i.e. S.No.232/1.A. He is requested to closely watch the construction work and submit his proposals for inclusion of this place in the Veterinary Dispensaries to be started during 1965-66.

(Sd.) T. Anandapadmanabhan,
for Director of Animal Husbandry,
Madras.

orwarded to the President
anjapatti.
19.6.64
Commissioner
P.C. Po...

/True copy/

அனுப்புதல்
திரு என். கோவிந்தன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் ,
கோயமுத்தூர்.

பெறுதல்
சார் ஆட்சியாளர்,
பொள்ளாச்சி.

ஒ.மு. 109001/88 தேதி 28.7.88

அம்மையீர்,

பொருள்: ஆக்கிரமிப்பு - பொள்ளாச்சி (தெ) ஊராட்சி ஒன்றியம் கஞ்சம்பட்டி ஊராட்சி கஞ்சம்பட்டி தபால் அலுவலகம் செல்லும் பாதையினை வேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற கோரல்.

பார்வை: கஞ்சம்பட்டி ஊராட்சி மன்றத்தலைவர் கடிதம் நாள் 23.6.88 மற்றும் மன்றத்தீர்மான எண்.5 நாள் 25.5.88

.....

பார்வை கடிதம் அதனுடன் பெறப்பட்ட கஞ்சம்பட்டி ஊராட்சி மன்ற தீர்மானம் ஆகியன அசலாக இத்துடன் இணைத்தனுப்பியுள்ளேன். கடிதத்தில் கோரியுள்ள கஞ்சம்பட்டி தபால் அலுவலகம் செல்லும் பாதையில் அமைந்துள்ள வேலை ஆக்கிரமிப்பை உடன் அகற்ற தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கும், ஊராட்சி மன்ற தலைவருக்கும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(ஒ.ம்) மா. நாகலிங்கம்,
மாவட்ட ஆட்சியருக்காக.

இணைப்பு: அசல் மனு
நகல்: தலைவர், கஞ்சம்பட்டி ஊராட்சி மன்றம்,
கஞ்சம்பட்டி. 642 003, பொள்ளாச்சி வட்டம்.

/உத்தரவுப்படி/

துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நி)

செவி/

பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

அனுப்புநர்
திரு பி.கே.கோபாலகிருஷ்ணன்,பி.எஸ்.ஸி.(பொறி),
நிர்வாகப்பொறியாளர்,த.கு.வ.வா.,
கிராமக்குடிநீர் திட்டக்கோட்டம்,
65, பாரதி பார்க் 7வது குறுக்கு சாலை,
கோவை.11.

பெறுநர்
தலைவர்,
கஞ்சம்பட்டி ஊராட்சி,
கஞ்சம்பட்டி(அஞ்சல்),
பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம்,
பொள்ளாச்சி.

கடித எண். 7019/கோ.வீ.இ./உவ/99 நாள் 2.12.1999

ஐயா,

பொருள்: வீட்டு இணைப்பு - பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம் - கஞ்சம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த நான்கு குடியிருப்புகளுக்கு தனியார் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க - அனுமதி அளிப்பது - தொடர்பாக

பார்வை:
1. அரசாணை(நிலை) எண்.260, நாள் 9.12.98.
2. தலைவர், கஞ்சம்பட்டி ஊராட்சி கடித நாள் 15.11.99.
3. ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்.114/99, நாள் 2.11.99.
4. உநிபொ/கிருதி உபகோட்டம்/பொள்ளாச்சி கடித எண்.கோ.781/கோ.வீ.இ./உநிபொ/கோவை/99, நாள் 18.11.99.

-------

பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், கஞ்சம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்கள் பார்வை-2 கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ள படியும், ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்.114/99, நாள் 2.11.99ன் படியும் உதவி நிர்வாகப்பொறியாளர், பொள்ளாச்சி அவர்களின் படியும் கஞ்சம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த நான்கு குடியிருப்பகளுக்கு ஏற்கனவே உள்ள இணைப்புகள் 115-க்கும் தற்போது அனுமதி வழங்குவது 285 ஆக மொத்தம் 400 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

| எண் | குடியிருப்பு | ஏற்கனவே உள்ள இணைப்புகள் | தற்போது அனுமதிப்பது | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கஞ்சம்பட்டி | 80 | 95 | 175 |
| 2 | கே.நாகூர் | - | 75 | 75 |
| 3 | அம்மேகவுண்டனூர் | 22 | 53 | 75 |
| 4 | நம்பியமுத்தூர் | 13 | 62 | 75 |
| | மொத்தம் | 115 | 285 | 400 |

<u>நிபந்தனைகள்</u>

1. குடிநீர் விநியோக துணை விதிகளுக்கு உரிய த.கு.வ.வாரிய 'அதிகாரிகளிடம்' அங்கீகாரம் பெற்ற பின்பே நடைமுறைபடுத்தப்பட வேண்டும்.

2. ஒவ்வொரு வீட்டுக்குழாய் இணைப்பிற்கும் இணைப்புக் கட்டணமாக ரூ.1000/- வைப்புத் தொகையாக வசூலிக்கப் பட வேண்டும்.

3. குழாய்களின் மதிப்பு மற்றும் அதைப் பொருத்துவதற்கான செலவினத்தை வீட்டு உரிமையாளர்/வாடகைதாரர் செலுத்த வேண்டும். மேலும் இப்பணியினை அந்தந்த பயன் பெறுவோரை நேரிடையாக செய்து கொள்ள அனுமதிக்கலாம்.

எனினும் இதற்குரிய இணைப்பை ஊராட்சிகள் கொடுக்கும்போது அனுமதிக்கப்பட்ட பரிமாணத்தில் குழாய் உள்ளதா என சரிபார்க்கப்பட வேண்டும்.

4. வீட்டுக்குழாய் இணைப்பிற்கு குடிநீர் கட்டணமாக மாதாந்திரக் கட்டணம் ரூ.30/- வசூலிக்கப்பட வேண்டும்.

5. பொதுக்குழாய்களில் இருந்து குறிப்பாக பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்கள் வசிக்கும் இடங்களில் உள்ள குழாய்களிலிருந்து அவர்களின் குடிநீர் தேவைகள் பாதிக்கும் வகையில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படக்கூடாது.

6. மேலும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலாக பொதுக்குழாய்களிலிருந்து வீட்டுக் குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டு அது பொது குடிநீர் விநியோகத்திற்கு இடையூறாக அமைந்தால் அது போன்ற இணைப்புகளை சட்ட விரோதமானது என அறிவித்து அவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அனுமதி மூலம் துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பகுதிகளிலுள்ள பொது குடிநீர்க் குழாய் உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்/-பி.கே.கோபாலகிருஷ்ணன்.2.12.99,
நிர்வாகப்பொறியாளர், தகுவ வாரியம்,
கி.கு.தி.கோட்டம், கோவை-11.

நகல் மாவட்ட ஆட்சித் தலைவர் கோவை அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் மேற்பார்வைப்பொறியாளர், தகுவ வாரியம், கோவை வட்டம், கோவை அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ), பொள்ளாச்சி தெற்கு ஒன்றியம், அவர்களுக்கு தகவலுக்காகவும், மேல் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

நகல் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊ), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோவை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் உதவி நிர்வாகப்பொறியாளர், தகுவ வாரியம், கி.கு.தி.உபகோட்டம், பொள்ளாச்சி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நிர்வாகப்பொறியாளருக்காக, தகுவவா,
கி.கு.தி. கோட்டம், கோவை-11.

பள்ளிக் கல்வித்துறை
தலைமைச் செயலகம்
சென்னை–9.

**கடிதம் எண்.3882/மேநிக2/2012–1 , நாள் 15.03.2012**

அனுப்புநர்
திரு. ச.வேதரத்தினம், எம்.ஏ.,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6.(இணைப்புடன்)

ஐயா,

**பொருள்:–** முதலமைச்சரின் தனிப்பிரிவு மனு – கோவை மாவட்டம், கஞ்சம்பட்டி, அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தக் கோருதல் குறித்து.

**பார்வை:–**
1. கஞ்சம்பட்டி ஊராட்சி, திரு.எஸ்.சௌந்தராஜன் என்பாரின் 31.01.2012 நாளிட்ட மனு.
2. முதலமைச்சரின் தனிப்பிரிவு – தனி அலுவலரின் கடித எண். P/363965/2011, நாள்.27.12.2011.

----------

முதலமைச்சர் தனிப்பிரிவு வாயிலாக பெறப்பட்ட பார்வை 1ல் காணும் மனுவின் நகல் தக்க நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்காண் மனு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய பதிலை மனுதாரருக்கும், முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கும் தெரிவித்து, அதன் நகலொன்றை அரசுக்கும் அனுப்பி வைக்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு துணைச் செயலாளருக்காக.

நகல்
முதலமைச்சரின் தனிப்பிரிவு,
சென்னை–9.
திரு.எஸ்.சௌந்தரராஜன்,

தலைமைச் செயலகம்,
சென்னை—9.
Fax No : 044 - 25671253
E-mail : hfwsec@gmail.com

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (என்.2) த் துறை
கடித எண். 2482/என்.2/2013— , நாள்: 27.06.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045, ஜய ஆனி 13

அனுப்புநர்
டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
திரு எஸ்.செளந்தரராஜன்,
ஊராட்சி [redacted] செயலாளர்,
[redacted],
கஞ்சம்பட்டி ஊராட்சி, பொள்ளாச்சி தாலுகா,
கோவை மாவட்டம் (இணைப்புடன்)

அய்யா,

பொருள்: பொது சுகாதாரம் — கோவை மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம், கஞ்சம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துதல் — தொடர்பாக.

பார்வை:
1. தங்களது மனு நாள் 07.02.2014.
2. மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை துணைத் தலைவர் அவர்களின் 08.02.2014 நாளிட்ட கடிதம்.

------


பார்வையில் காணும் தங்களது மனுவில் கோரியுள்ள, கோவை மாவட்டம் பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம் கஞ்சம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தி அரசு ஆணை (நிலை) எண்.52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி—II(2)) துறை—ல் 21.02.2014 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப்பணிக்கப்பட்டுள்ளேன். (அரசு ஆணை நகல் இணைக்கப்பட்டுள்ளது)

தங்கள் நம்பிக்கையுள்ள

அரசு செயலாளருக்காக.

நகல்
நேர்முக உதவியாளர்,
தமிழ்நாடு சட்டமன்ற பேரவை துணைத் தலைவர் அலுவலகம்,
தலைமைச்செயகலம், சென்னை— 600 009.

LACHY SOUTH BLOK



## ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்ககம்.

**அனுப்புநர்:**

இயக்குநர்,
ஆரம்ப சுகாதார நிலையங்கள்,
சென்னை-600 006.

**பெறுநர்:**

திரு. எஸ். சௌந்திரராஜன்,
தலைவர்,
கஞ்சம்பட்டி ஊராட்சி,
பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றியம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

ஓ.மு.எண்: 27993/ஆசுநி(6)/89/இநிட.1, நாள்: 1.9.89.

அய்யா,

பொருள்: கட்டிடம்--ஆரம்பசுகாதார நிலையம்--கஞ்சம்பட்டி கோயம்புத்தூர் மாவட்டம்-கட்டிடம் கட்டுதல்--குறித்து--

பார்வை: திரு. எஸ். சௌந்தரராஜன், தலைவர், கஞ்சம்பட்டி ஊராட்சி அவர்களின் மனு நாள்: 7-7-89.

...

பார்வையில் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுக்கும் கஞ்சம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு 2 ஏக்கர் மற்றும் 05. சென்ட் நிலம் நன்கொடையாக பெறப்பட்டுள்ளது. அரசு வகுத்துள்ள விதிமுறைப்படி குறைந்தது 3 ஏக்கர் நிலம் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கு தேவைப்படுகிறது. மேற்கொண்டு 1 ஏக்கர் நிலம் தானமாக பெற்றுத்தரப்படுமானால் கஞ்சம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களின் இயக்குநருக்காக,
சென்னை-600 006.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது.

செயலர்,
மக்கள் நல்வாழ்வு, இந்திய மருத்துவம், ஹோமியோபதி மற்றும்
குடும்ப நலத்துறை, புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-600 009.

ச.சா. 21.9.

ORIGINAL VERIFIED
TRUE COPY ATTESTED

NOTARY
T. NAGASUNDARAM
UDUMALPET
CBE DIST
INDIA

17.3.95

T. NAGASUNDARAM, B.Sc., BL.,
ADVOCATE & NOTARY
11, Kacheri Street,
UDUMALPET - 642 126.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புமருந்துத்துறை

அனுப்புநர்
டாக்டர் பொ. பரமசிவம், எம்பிபிஎஸ். டிபிஎச்.
மாவட்ட உடல்நல அலுவலர்,
கோயமுத்தூர்-18.
தொ. பே. எண்: 23930.

பெறுநர்
திரு எஸ். சௌந்தரராஜன்,
தலைவர்,
கஞ்சம்பட்டி ஊராட்சி மன்றம்,
கஞ்சம்பட்டி.

ந.க. எண் 3445/அ2/89 நாள்: 22.9.89

ஐயா,

பொருள்: பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம்- கஞ்சம்பட்டி ஆரம்பசுகாதாரநிலையம்- கட்டிடம் கட்ட- நிலம்- சம்பந்தமாக.

பார்வை: 15.5.89 நாளிட்ட கஞ்சம்பட்டி ஊராட்சி மன்ற தலைவரின் கடிதம்.

----

பார்வையிற் கண்ட கடிதத்தில் தாங்கள் 2.05 ஏக்கர் நிலம் கஞ்சம்பட்டி ஆரம்பசுகாதாரநிலையக் கட்டிடம் மற்றும் ஊழியர் குடியிருப்பு கட்ட பதிவு செய்த பத்திரத்தை அனுப்பியுள்ளீர்கள். ஆனால் சென்னை ஆரம்பசுகாதார நிலையங்களின் இயக்குநர் அவர்கள் ஆரம்பசுகாதார நிலையக் கட்டிடம் கட்ட குறைந்தது 3 ஏக்கர் நிலமாவது தேவை என கூறியுள்ளார்கள். எனவே மேலும் ஒரு ஏக்கர் நிலம் தற்போது தந்துள்ள இடத்தை ஒட்டி தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொ. பரமசிவம்
மாவட்ட உடல்நல அலுவலர்,
கோவை.

தொலைபேசி : 459521




# இயற்கை இயம்
# NATURISM


நிறுவனர் & செயலர்
கு. இரகுபதி
369, அண்ணா சாலை,
சைதை, சென்னை-15.


எல்லா உயிரினங்களையும் வாழவைக்கும் இயற்கை சக்திகளாகிய ஆகாயம், சூரிய நிலம், நீர், காற்று ஆகியவையே கடவுள். சூரியனே முதற் கடவுள். மரங்கள் வளர்த்தலே கடவுள் பணி. திருக்குறளே பொதுமறை இயற்கையின் அடிப்படையில் உணவு, மருத்துவம், கல்வி, நீதி வாழ்க்கை. ஆட்சி அமைத்தல்...... நிலம், நீர், ஆகாயம் பொதுவாக்குதல்..... நிலம் நீர் காற்றைக் கெடுக்காத விஞ்ஞானத்தை வளர்த்தல்.... பச்சை நிற ஆடை அணிதல் இவையே இயற்கை இயத்தின் கொள்கை-செயல்பாடு-அடையாளமாகும். ஜாதி, மதம், மொழி, நிறம் எல்லைசண்டைகளிலிருந்து விடுபட்டு இயற்கை நியதியில் இன்பமாக வாழ அனைவரும் இயற்கை இயத்தில் இணைய வேண்டுகிறோம்.

★ **தென் இந்திய ஆதிவாசிகள் நலச் சங்கம்** (பதிவு)
இச்சங்கம் நரிக்குறவர், இருளர், ஆதிதிராவிடர், திக்கற்றோர் 1000 பிள்ளைகளுக்காக ஐந்து இடங்களில் 3 பள்ளிகள், 5 விடுதிகள், 2 காப்பகம், 1 பாலர்பள்ளி, அச்சகம், பால்பண்ணை, விவசாயப் பண்ணை, வீட்டுப் பணிப் பெண்கள் தொண்டு இல்லம், மணிமாலை கூட்டுறவுச் சங்கம் நடத்துகின்றது.

★ **தமிழ் நாடு திக்கற்றோர் இல்லங்களின் சங்கம்** (பதிவு)
167 இல்லங்களுக்காகவும் 25,000 திக்கற்ற பிள்ளைகளுக்காகவும் தொண்டாற்றும் சங்கம்.

★ **நல்ல மாணவர் மன்றம்** (பதிவு)
மாணவரிடையே ஒழுக்கத்தையும் மற்ற திறமைகளையும் வளர்க்கவும் பாராட்டவும் நடத்தப் பெறும் மன்றம்.

★ **பசுஞ்சிலுவைச் சங்கம்** (பதிவு)
மரங்களை வளர்க்கவும் பாதுகாக்கவும் தொண்டாற்றும் சங்கம்.

★ **அகில இந்தியக் கிராமத் தலைவர்கள் சங்கம்** (பதிவு)
கிராம ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும், கிராமத் தலைவர்களிடையே தொண்டாற்றும் கட்சிச் சார்பற்ற சங்கம்.

★ **அகில இந்திய இருளர்கள் சங்கம்** (பதிவு)
பாம்பு, எலி பிடித்து மிக ஏழ்மையான நிலையில் வாழும் ஆதிவாசிகளுக்காகத் தொண்டாற்றும் சங்கம்.

★ **அகில இந்திய வேலை வேண்டுவோர் சங்கம்** (பதிவு)
படித்த, படிக்காத ஆண், பெண் அனைவருக்கும் வேலை வாய்ப்பை வளர்க்கவும், பெற்றுத் தரவும் தொண்டாற்றும் சங்கம்.

தேதி 15.3.91

அன்புள்ள சகோதரர் திரு. S. சௌந்திரராசன்

அவர்களுக்கு வணக்கம். தங்களின் 21.2.91 கடிதம் கிடைக்கப் பெற்றேன். தங்களது கோரிக்கையை நமது சங்கத்தின் மூலம் ஏற்கனவே திரு. கார்த்திகேயன் I.A.S (ஆளுநரின் ஆலோசகர்) அவர்களை நேரில் சந்தித்து மனு கொடுத்தேன். அரசின் இல கொள்கைகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால்தான் செய்ய முடியும். எனவே இது பற்றி ஆலோசனை செய்து வருவதாகக் கூறினார். ஆனால் ஊராட்சிமன்றங்களை கலைத்ததிலிருந்து அவரால் ஒன்றும் செய்ய இயல-வில்லை யென்று தெரிகிறது.

நமது சங்கம் சொல்வதை கேட்க வேண்டும் எனில் நாம் அனைவரும் ஒற்றுமையாகவும் கட்சி சார்பற்றமலும் இருக்க வேண்டும். பெரும்பாலான நம் அமைப்பாளர்கள் சங்க வளர்ச்சியில் அக்கறை காட்டவில்லை. தாங்கள் ஒருவர்தான் ஆதரவு தந்து வருகிறீர். வரும் தேர்தலுக்குப் பிறகு நாம் முனைப்பாக சங்கத்தை வளர்ப்போம். தங்கள் ஆதரவுக்கு நன்றி. வணக்கம்

அன்புள்ள
கு. இர...

TAMIL NADU VETERINARY AND
ANIMAL SCIENCES UNIVERSITY

MADHAVARAM MILK COLONY
CHENNAI - 600 051, INDIA
Phone : 0091- 44 2555 1584 (Dir.)
0091- 44 2555 1586 / 87
Fax : 0091- 44 2555 1585 / 76
Res : 0091- 44 4542 8816
E-mail : registrar@tanuvas.org.in

Dr. M.THIRUNAVUKKARASU, B.V.Sc., M.Sc. (Ag.), Ph.D.,
Registrar

**Lr.No.9507/R.1/RC/2017, dated 21.06.2018**

To,

Th.S.Soundararajan,
No.1/32A, Vinayakar Kovil Street,
Kanjampatti, Pollachi,
Coimbatore District.

Sir,

**Sub:** Tamil Nadu Veterinary and Animal Sciences University – Other authorities of the University – Research Council – Nomination of Members under Clause 10(1)(i) of TANUVAS Statutes – Orders – Issued.

**Ref:** This office Proceedings U.O.60047/R.1/RC/2017 No.9507 /R.1 /RC / 2017, dated 21.06.2018.

*****

I enclose herewith this Office proceedings cited, nominating you as a member of the Research Council of this University in the category of three progressive farmers under Clause 10(1)(i) of Statutes for a period of three years with effect from 13..06.2018.

The Director of Research, TANUVAS and Member Secretary of the Research Council will intimate the date time and venue etc. of the meetings of the Research Council.

I request you to kindly make it convenient to attend the meetings whenever convened.

With kind regards.

Yours sincerely,

REGISTRAR 21.06.18

Encl: As above

Copy to: The Director of Research and Member-Secretary of Research Council,
TANUVAS, MMC, Chennai-600 051

## TAMIL NADU VETERINARY AND ANIMAL SCIENCES UNIVERSITY

U.O.No.60047/R.1/RC/2017
No.9507/R.1/RC/2017

Office of the Registrar,
Madhavaram Milk Colony, Chennai-51.
Dated: 21.06.2018.

**PROCEEDINGS**

**Sub:** Tamil Nadu Veterinary and Animal Sciences University – Other authorities of the University – Research Council – Nomination of Members under Clause 10(1)(h) and (i) of TANUVAS Statutes – Orders – Issued.

**Ref:**
1) G.O.Rt.No.168, Animal Husbandry, Dairying and Fisheries (AH.6) Department, dated 05.08.2013, and this Office U.O.No.60254/R.I/RC/2013 No.2617 /R.I/ RC/ 2013, dated 03.09.2013.
2) This Office Lr.No.9507/R.1/RC/2017, dated 28.07.2016, 27.11.2017, 17.01.2018 addressed to the Secretary to Govt., Animal Husbandry and Fisheries Dept., Chennai-9.
3) G.O.(D).No.231, dated 13.06.2018 of the Secretary, Animal Husbandry and Fisheries(AH-6) Dept., Chennai – 9.

*****

**ORDER:**

In exercise of the powers conferred by Sub-clause (1)(h) and (i), Clause 10 of Statutes, the Pro-Chancellor has nominated the following persons on the recommendation of the Vice-Chancellor as members of the Research Council of the University for a period of three years with effect from 13.06.2018

**Clause 10 1(h) SPECIALISTS OF EMINENCE:**

1. Dr.V.Purushothaman,,
   II B, Second Street, South High Court Colony, Villivakkam, Chennai-600 049
2. Dr.N.Daniel Joy Chandran,
   A1/1, Mount Villa, Masthan Gori Road, Adambakkam, Chennai-600 088

**Clause 10 1 (i) PROGRESSIVE FARMERS:**

1. Th.S.Soundararajan,
   No.1/32A, Vinayakar Kovil Street, Kanjampatti, Pollachi, Coimbatore District.
2. Th.R.Gobalakrishnan,
   No.3/27A, Avalappampatti A.Nagoor post, Pollachi (TK), Coimbatore Dist.
3. Th.S.Pandiyan,
   No.4/233, Periyar Nagar, Pethappampatti post,Udumalpet taluk, Tiruppur District.

**/BY ORDER OF THE VICE-CHANCELLOR/**

REGISTRAR. 21/06

To

The Members concerned.
The Director of Research and Member-Secretary of Research Council, TANUVAS., MadhavaramMilk Colony, Chennai-51.
Cc: All University Officers, TANUVAS.
Cc: The Administrative Officer/PC to VC/Steno to Registrar/Finance Officer, TANUVAS.

## ABSTRACT

Animal Husbandry, Dairying and Fisheries Department – Tamil Nadu Veterinary and Animal Sciences University – Research Council – Nomination of members under clause 10(1) (h) and (i) of Tamil Nadu Veterinary and Animal Sciences University statutes for the Research Council– Orders – Issued.

---

Animal Husbandry, Dairying and Fisheries (AH6) Department

G.O.(D)No.231

Dated 13.06.2018.
திருவள்ளுவராண்டு: 2049.
வைகாசி 30.

Read:

1. G.O.(D)No.168, Animal Husbandry, Dairying and Fisheries (AH6) Department, dated 05.08.2013.
2. From the Registrar, Tamil Nadu Veterinary and Animal Sciences University letter No.9507/RI/RC/2016, dated 16.09.2016, 27.11.2017 and 12.03.2018.

-----

ORDER:

In the Government Order first read above, orders were issued nominating two Specialists of Eminence and three Progressive Farmers specialized in Animal Husbandry and Fisheries as Members of the Research Council of Tamil Nadu Veterinary and Animal Sciences University under clause 10(1) (h) and (i) of the Statutes of Tamil Nadu Veterinary and Animal Sciences University for a period of three years as approved by the Pro-Chancellor.

2. In the letter second read above, the Registrar, Tamil Nadu Veterinary and Animal Sciences University has requested for nomination of members under specialist of Eminence Category and Progressive Farmer Category for the Research Council from the panel of names recommended by the Vice-Chancellor, Tamil Nadu Veterinary and Animal Sciences University, for a period of three years, since the term of members nominated by the Pro-Chancellor in the Government Order first read above for a period of three years with effect from 05.08.2013 expired on 04.08.2016 After Noon.

3. The Government have accepted the request of the Registrar, Tamil Nadu Veterinary and Animal Sciences University and approve the nomination of the following two Specialists of Eminence and three Progressive Farmers specialized in Animal Husbandry and Fisheries as members of Research Council under clause 10 (1) (h) and (i) of the statutes of Tamil Nadu Veterinary and Animal Sciences University for a period of three years:-

**Clause 10(1) (h) – SPECIALISTS OF EMINENCE**

1. Dr.V.Purushothaman,
   II B, Second Street,
   South High Court Colony,
   Villivakkam,
   Chennai – 600 049.

2. Dr.N.Daniel Joy Chandran, Ph.D.,
   A1/1, Mount Villa,
   Masthan Gori Road,
   Adambakkam,
   Chennai – 600 088.

**Clause 10(1) (i) – PROGRESSIVE FARMERS:**

a) Thiru. S.Soundararajan
   No:1/32A, Vinayakar Kovil Street,
   Kanjampatti,
   Pollachi, Coimbatore District.
   Cell No:7598042438

b) Thiru.R.Gobalakrishnan,
   No.3/27A, Avalappampatti,
   A.Nagoor Post, Pollachi (TK),
   Coimbatore District,
   Cell No:9965150273

c) Thiru.S.Pandiyan,
No:4/233,
Periyar Nagar,
Pethappampatti Post,
Udumalpet Taluk,
Tiruppur District,
Cell No:9865950950

(By order of the Governor)

K. Gopal
Principal Secretary to Government

To
The Registrar(i/c), Tamil Nadu Veterinary and Animal Sciences University, Chennai - 51

Copy to:
The Special Personal Assistant to Minister (Animal Husbandry), Chennai -9.
The Private Secretary to Principal Secretary to Government, Animal Husbandry, Dairying and Fisheries Department, Chennai 9.
Stock File/ Spare Copy

/Forwarded by order/

13.6.16

Section Officer

13/6/16

பொது நூலகத் துறை

அனுப்புநர்

திரு. ஆர். வி. சண்முகசுந்தரம்,
எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்சி.,
மாவட்ட நூலக அலுவலர்,
மாவட்ட நூலக ஆணைக்குழு,
த.பெ.எண். 277,
கோயமுத்தூர் – 641 001.

பெறுநர்

திரு. எஸ். சௌந்திராஜன்,
பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
கஞ்சம்பட்டி (அஞ்சல்),
பொள்ளாச்சி வட்டம்.

ந.க.எண். 8707/அ5/99 /நாள் 29.11.99

ஐயா,

பொருள்: நூலகம் – மாவட்ட நூலக ஆணைக்குழு, கோயமுத்தூர் – பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றியம் (தெற்கு), கஞ்சம்பட்டி ஊராட்சியில் நூலகம் திறக்க வேண்டுதல் – சார்பு.

பார்வை: தாங்கள் 29.11.99 அன்று நேரில் வேண்டுகோள்.

******

தாங்கள் நேரில் கேட்டுக் கொண்டபடி தற்போது கஞ்சம்பட்டியில் கிளை நூலகம்/ஊர்ப்புற நூலகம் திறக்க இயலாத நிலையுள்ளது. ஆனால் அங்கு பகுதிநேர நூலகம் ஒன்று திறக்கலாம். பகுதிநேர நூலகம் திறக்க கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகள் அனைத்தும் முழுமையாக நிறைவு செய்து தர வேண்டும்.

<u>நிபந்தனைகள் விவரம்:</u>

1. நூலகம் செயல்பட வாடகையற்ற வசதியான இலவசக் கட்டடம்.
2. நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழுவிற்குப் பத்திரப்பதிவு மூலம் அன்பளிப்பாக வழங்க வேண்டும்.
3. ரூ. 2000/– மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக வழங்க வேண்டும்.
4. குறைந்த பட்சம் 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.
5. குறைந்த பட்சம் ரூ. 1000/– செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.
6. (அ) மக்கள் தொகைக்கான சான்று (1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி)
   (ஆ) எந்த வட்டம்/ஊராட்சி/பேரூராட்சி/நகராட்சிக்குட்பட்டது என்ற விவரம்.
   (இ) அருகிலுள்ள கிளை நூலகம்/பகுதிநேர நூலகம்/ஊர்ப்புற நூலகம் இருப்பினும் அதன் விவரம்.

2. மேற்குறிப்பிட்ட அனைத்து நிபந்தனைகளையும் முழுமையாக நிறைவு செய்து தந்தால் மட்டும்தான் பகுதிநேர நூலகம் ஏற்படுத்த இயலும் என்பதை தங்களுக்கு முடிவான பதிலாக அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட நூலக அலுவலர்,
கோயமுத்தூர்.

# NACHIMUTHU POLYTECHNIC COLLEGE

**Pollachi – 642 003**

**SCHEME OF COMMUNITY DEVELOPMENT THROUGH POLYTECHNICS**

**(Sponsored by the Ministry of Human Resource Development, Govt. of India, New Delhi)**

# EXECUTIVE COMMITTEE MEETING
# 2016 – 2017



**DATE: 16.02.2017** **VENUE: NPTC Conference Hall**

**TIME: 02.30 PM**


Makkinaickenpatty,
Udumalai Road,
Pollachi-642 003, Tamilnadu.
Phone no: 04259-236030, 40, 50
Fax No: 04259 – 236050
Website: www.nptc.ac.in
E-mail id: principal@nptc.ac.in, cdtp@nptc.ac.in

## NACHIMUTHU POLYTECHNIC COLLEGE

POLLACHI – 642 003

SCHEME OF COMMUNITY DEVELOPMENT THROUGH POLYTECHNICS

(Sponsored by the Ministry of Human Resource Development, Govt. of India, New Delhi)

| Date | Time | Venue |
|---|---|---|
| 16.02.2017 | 02.30 pm | NPTC Conference Hall |
| EXECUTIVE COMMITTEE MEMBERS – 2016 – 2017 | | |

| | | |
|---|---|---|
| 1. | **Thiru. R. Manivannan**,<br>Principal / Chief - Coordinator,<br>Nachimuthu Polytechnic College, Pollachi. | Chairman |
| 2. | **Prof. C. Ramaswamy**,<br>Secretary,<br>NIA Educational Institutions, Pollachi. | Member |
| 3. | **Dr. S. Vijayarangan**,<br>Director (Academic),<br>MCET – NPTC, Pollachi. | Member |
| 4. | **Dr.N. Kempuchetty,**<br>Co-ordinator,<br>Agricultural Training Centre,<br>NIA Community College,<br>Manakkadavu, | Member |
| 5. | **Dr. M. Ashok**,<br>HOD/MECH,<br>Nachimuthu Polytechnic College, Pollachi. | Member |
| 6. | **Thiru.R.Murugesan,**<br>Block Development Officer, ( Village Panchayat )<br>Pollachi South Panchayat Union, Pollachi. | Member |
| 7. | **Thiru.S.Vijayakumar,**<br>Block Development Officer, ( Block Panchayat )<br>Pollachi South Panchayat Union, Pollachi. | Member |
| 8. | **Thiru. S. Soundararajan**,<br>Ex-Vice Chairman, and Tamil Nadu State Executive Committee Member-<br>Sarva Shiksha Abiyan, Kanjampatti, Pollachi. | Member |
| 9. | **Thiru. Lion.Ashok Shanmugasundram**,<br>President,<br>Lions Club of Anaimalai, Anaimalai, Pollachi. | Member |
| 10. | **Dr. N. Jayaraman**,<br>Professor TNAU (Retd),<br>President- Kamadhenu Uzhavar Mandram, Vadakkipalayam. | Member |
| 11. | **Thiru.V.Chandrasekaran,**<br>Internal Co-ordinator,<br>PSG Polytechnic College, Coimbatore. | Member |
| 12. | **Thiru. S. Nagarajan**,<br>Community Development Consultant/ Nodal officer, CDTP,<br>Nachimuthu Polytechnic College, Pollachi. | Member |
| 13. | **Dr. N.Arumugam**,<br>HOD- I Year/Internal – Coordinator,CDTP,<br>Nachimuthu Polytechnic College, Pollachi. | Member - Secretary |

பொள்ளாச்சி ● வியாழன் ● ஜனவரி 26, 2017

# மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி

பொள்ளாச்சி, ஜன. 26–

நெகமத்தில் விவசாயிகள் மற்றும் பெண்களுக்கு மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி அளிக்கப்பட்டது.

பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியின் சமுதாய மேம்பாட்டு திட்டம் மற்றும் விரிவாக்க சேவைத்துறை சக்திபுரா, மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்ப கல்லூரி இணைந்து விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி அளிக்கப்பட்டது.

நெகமம் என்.ஜி.ஏ., கல்வி நிறுவன விரிவாக்க மையத்தில் நடந்த பயிற்சியில் நெகமம், சின்ன நெகமம் பகுதி விவசாயிகள், பெண்கள் பங்கேற்றனர்.

திட்ட அலுவலர் தாகஜன் பேசியதாவது:

ஒவ்வொருவர் வீட்டிலும் காய்கறி, பழம், உணவு உள்ளிட்ட மக்கும் கழிவுகள் அதிகளவில் கிடைக்கின்றன. தேவையில்லாத இக்கழிவுகளை கொண்டு, மண்புழு உரம் தயாரிக்க பயன்படுத்தினால் நல்ல லாபம் பார்க்க முடியும்.

'வெர்மி கம்போஸ்ட்' என அழைக்கப்படும் மண்புழு உரம் நிலத்துக்கு மாசு ஏற்படாமல் தடுப்பதோடு, நம் உடலுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத காய்கறிகளை அதிகளவில் விளைவிக்கவும் உதவுகின்றன.

மண்புழு உரம் தயாரிக்கும் தொழிலில் அனைவரும் இறங்கி ஜெயிக்க முடியும். அதற்கென இருக்கும் தயாரிப்பு முறையை மட்டும் கவனமாக பின்பற்ற வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.

வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவன விரிவுரையாளர் ஹரிபிரசாத் பேசியதாவது:

தரிசு நில மேம்பாட்டுக்கு மிகவும் பயன்படக்கூடியது மண்புழு உரம், வீடுகளில் செடி வளர்ப்பவர்களுக்கும், தோட்டம் அமைத்திருப்பவர்களுக்கும் மண்புழு உரம் அதிக நன்மை தரும்.

நன்செய் நிலங்களில் பல விவசாயிகள் மண்புழு உரம் உபயோகிப்பதன் மூலம் விளைச்சலை பெருக்கி காட்டியுள்ளனர்.

கோழிவளர்ப்பவர்கள், மீன்குஞ்சு வளர்ப்பவர்கள் மண்புழுவை தீனியாக வழங்குகின்றனர்.

மகாராஷ்டிராவில் மேற்கொண்ட ஆய்வில் மண்புழு உரமிட்டு பயிரிடப்பட்ட திராட்சைகள் நல்ல நறுமணத்துடனும், கூடுதல் விளைச்சலையும் கொடுத்துள்ளது. இதுபோன்ற இயற்கை உரத்துக்கு தற்போது புது மவுசு ஏற்பட்டுள்ளது.


இவ்வாறு, ஹரிபிரசாத் பேசினார்.

மேலும், இடம், மூலப்பொருட்கள், தயாரிப்பு முறை, முதலீடு, இயந்திரங்கள், ஆட்கள், சாதகபாதகங்கள் பற்றி விளக்கினர்.

நிகழ்ச்சியில் சின்னநெகமம் உழவர் மன்ற தலைவர் செந்தில்குமார் உள்பட விவசாயிகள், மகளிர் என 40 பேர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியின் சமுதாய மேம்பாட்டு திட்ட ஆசிரியை ராஜேஸ்வரி செய்திருந்தார்.

# சமுதாய மேம்பாட்டுத் திட்ட பயிற்சி துவக்கம்



நிகழ்ச்சியில் பேசுகிறார் கோவை கனரா வங்கியின் சிறு, குறு, நடுத்தர தொழில்முனைவோர் வளர்ச்சி மையத் தலைவர் வணங்காமுடி.

**பொள்ளாச்சி, ஜூலை 19:** பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியில் சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேலை இல்லாதவர்களுக்கான தொழில்முனைவோர் பயிற்சி செவ்வாய்க்கிழமை துவங்கியது.

இதற்கான துவக்க விழாவில், சமுதாய மேம்பாட்டுத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் வரவேற்றார். பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் மணிவண்ணன் தலைமை வகித்தார். கோவை மாவட்ட கனரா வங்கியின் சிறு, குறு, நடுத்தரத் தொழில்முனைவோர் மையத் தலைவர் வணங்காமுடி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் உள்ள சிண்டிகேட் வங்கிக் கிளை மேலாளர் தெய்வசிகாமணி வாழ்த்துரை வழங்கினார். இதில், 200 இளைஞர்கள், பெண்கள் பங்கேற்றனர். சமுதாய மேம்பாட்டுத் திட்ட ஆலோசகர் நாகராஜன் நன்றி கூறினார்.

[illegible] | 20.07.16 | [illegible]

2.7.1

# நாச்சிமுத்து பாலிடெக்னிக்கில் இலவசத் தொழிற்பயிற்சி

## இளைஞர்களுக்கு அழைப்பு

தினமணி | pageno: 8 | Date: 26.5.16.

# நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி

(தன்னாட்சி, ISO 9001 : 2008 தரச்சான்றிதழ் பெற்றது)

பொள்ளாச்சி - 642 003.

## சமுதாய மேம்பாட்டுத் திட்டம்

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம், புது தில்லி

## இலவச தொழிற் பயிற்சிகள்

### திட்ட விளக்கம்

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் சமுதாய மேம்பாட்டுத்திட்டம் 2010-ஆம் ஆண்டு முதல் பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கிராமப்புறங்களில் உள்ள படித்த / படிப்பைத் தொடர முடியாத இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் இலவசமாக சுய தொழிற்பயிற்சி அளித்து அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதே ஆகும். இத்திட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புவோர் நேரில் வந்து பதிவு செய்து கொள்ளவும்.

நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் அளிக்கப்படும் பயிற்சிகள்

- வீட்டு வயரிங் — 6 மாதம்
- இரண்டு சக்கர வாகனங்கள் பழுது பார்த்தலும், பராமரித்தலும் — 6 மாதம்
- CNC புரோகிராமிங் — 6 மாதம்
- ஜெனரல் மெஷினிஸ்ட் — 6 மாதம்
- குளிர் பதனம் மற்றும் காற்று சீரமைப்பு பயிற்சி (R&A/C) — 6 மாதம்
- TV/VCD/VCR பழுது பார்த்தலும், பராமரித்தலும் — 6 மாதம்
- கணிப்பொறி அடிப்படை பயிற்சி — 6 மாதம்
- கணிப்பொறி (Desktop Publishing - DTP) — 6 மாதம்
- வீட்டு உபயோக மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தலும், பராமரித்தலும் — 2 வாரம்
- கட்டிங் & டெய்லரிங் — 5 மாதம்
- ஸ்கிரீன் பிரிண்டிங் — 1 மாதம்
- காகித நகை தயாரித்தல் — 3 நாள்
- உலர் பூக்கள் தயாரித்தல் — 3 நாள்
- சித்திரத் தையல் வேலை (Embroidery) — 1 மாதம்
- சணல் பைகள் தயாரித்தல் — 1 மாதம்
- மெழுகு பொம்மைகள் தயாரித்தல் — 2 வாரம்
- கயிறு கால் மிதியடி தயாரித்தல் — 1 மாதம்
- காளான் வளர்ப்பு — 3 நாட்கள்

பயிற்சியின் முடிவில் மத்திய அரசின் சான்றிதழ் வழங்கப்படும்

மேலும் விபரங்களுக்கு

| | |
|---|---|
| சமுதாய மேம்பாட்டு ஆலோசகர்<br>**சமுதாய மேம்பாட்டுத்திட்டம்**<br>நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி<br>பொள்ளாச்சி - 642 003.<br>தொலைபேசி 04259-236030/40<br>99429 08419 | முதல்வர் / முதன்மை ஒருங்கிணைப்பாளர்<br>**சமுதாய மேம்பாட்டுத்திட்டம்**<br>நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி<br>பொள்ளாச்சி - 642 003.<br>தொலைபேசி 04259-236030/40 |

NIA Printing Division::Pollachi

☆ இலவச தொழிற் பயிற்சிகள் ☆


☆ இலவச தொழிற் பயிற்சிகள் ☆

# நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி

பொள்ளாச்சி- 642 003

## சமுதாய மேம்பாட்டுத் திட்டம்

### சோலார் அப்ளையன்சஸ்



(சூரிய எரிசக்தி உபகரணங்கள்)

இன்றைய மின் சிக்கனத்தையும், மின்சார தட்டுப்பாட்டையும் சரிசெய்ய ஒரே வழி "சோலார் அப்ளையன்சஸ்" பயன்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.


உலகின் மீது ஒரு மணி நேரம் விழும் சூரிய சக்தி 210,000 லட்சம் டன் நிலக்கரி தரும் சக்திக்குச் சமம் என்று கணக்கிடப்படுகிறது.இவ்வளவு அபரிமிதமான சக்தியைச் சூரியன் வெளியிடுவதால் அதன் சக்தியைக் கொண்டு சில செயல்களைச் செய்ய முயன்று, வெற்றியும் கண்டு வருகிறார்கள். உதாரணமாக விண்ணில் செலுத்தும் ராக்கெட்டுகள், செயற்கைக் கோள்கள் போன்றவை அவற்றிற்கு வேண்டிய மின்சாரத்தை சூரிய சக்தியிலிருந்து தயாரித்துக் கொள்கின்றன.


- சூரியன் வெளியிடும் அபரிமிதமான வெப்ப சக்தியால் மின்சாரம் தயாரிக்க முடியும்.
- கொதிகலங்களிலுள்ள நீரை வெப்பபடுத்த முடியும்.
- சமையல் செய்யவும், வெந்நீரை வைக்கவும் சூரிய சக்தியை இப்போது உபயோகப்படுத்தி வருகிறார்கள்.
- சோலார் குக்கர் என்ற வகை அடுப்பு, சூரியனின் வெப்பசக்தியைக் குவியச்செய்து சமையல் செய்ய உதவுகிறது.
- அறிவியல் ஆராய்ச்சிகளில் சூரிய சக்தியை மேலும் பலவழிகளில் உபயோகப்படுத்திக்கொள்ள ஆராய்ச்சியாளர்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- சூரியனின் வெப்பசக்தியினை பயன்படுத்தி செயல்படும் கார், இரண்டு சக்கர வாகனங்கள் அறிவியலின் ஓர் அரிய கண்டுபிடிப்பு.


சூரியனிலிருந்து வெளியிடும் சக்திதான் உலக நடப்பில் பலவித இயக்க சக்திகளாக, இயந்திர சக்திகளாக, ரசாயன சக்திகளாக, மின் சக்திகளாக மாறி உதவுகிறது. ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாதவைபோல் தோன்றினாலும், சூரிய சக்திதான் எல்லாவற்றிற்கும் மூலாதார சக்தியாகச் செயல்படுகிறது. கீழ்க்கண்ட சூரிய உபகரணங்கள் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் பயன்கள்.

**சூரிய உபகரணங்கள்:**

1. சோலார் வாட்டர் ஹீட்டர்
2. சோலார் ஹைபிரிட் சிஸ்டம்ஸ்
3. சோலார் ஸ்டிரீட் லைட்
4. சோலார் ஹோம் லைட்
5. விண்டு மில்







**பயன்கள்:**

- இயற்கையின் மூலம் மின் உற்பத்தி பெற்று,செயற்கை மின்சாரத்திற்கு செலுத்தும் மின்கட்டணம் குறைகிறது.
- தடையில்லா மின்சாரம் கிடைக்கிறது.
- அனைத்து இடங்களுக்கும் பொருத்தமானது.

மேலும் விபரங்களுக்கு

சமுதாய மேம்பாட்டு ஆலோசகர்
சமுதாய மேம்பாட்டுத் திட்டம்
நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி,
பொள்ளாச்சி-642 003

முதல்வர்/ஒருங்கிணைப்பாளர்
சமுதாய மேம்பாட்டுத் திட்டம்
நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி,
பொள்ளாச்சி-642 003

நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி, பொள்ளாச்சி

சமுதாய மேம்பாட்டுத் திட்டம்

டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி

விரிவாக்க சேவைத்துறை - சக்தி புரா


இணைந்து நடத்தும்

# மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம்

**மழை நீர் சேமிப்பு என்றால் என்ன ?**

மழை பெய்யும் போது நேரடியாக அதனை சேகரிப்பதும் பூமிக்குள் செலுத்துவதும் மழை நீர சேகரிப்பு ஆகும்.

**மழை நீர் சேமிப்பின் முக்கியத்துவம்**



- நிலத்தடி நீர்த்தாங்கிகளில் உள்ள நீர் வளத்தை அதிகரிக்க இயலும்.
- நிலத்தடி நீர் மட்டம் குறைவதைத் தடுக்க இயலும்.
- நிலத்தடி நீரின் தரத்தை அதிகரிக்க இயலும்.
- கடலோரப் பகுதிகளில் கடல் நீர் ஊடுருவலைத் தவிர்க்க இயலும்.
- நகரப் பகுதிகளில் மழையால் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தவிர்க்க இயலும்.
- களிமண் பகுதிகளில் உள்ள கட்டிடங்களில் உருவாகும் விரிசல்களைத் தடுக்க இயலும்.

**மழை நீரை சேகரிக்க சிறந்த வழிமுறைகள் :**

மழை நீரை தொட்டிகளில் சேர்த்து வைப்பது அல்லது பூமிக்குள் செலுத்துவது என்பது ஒவ்வொரு பகுதியில் பெய்யும் மழையின் அளவைப் பொறுத்ததாகும். உதாரணமாக வருடம் முழுவதும் மழை பெய்யும் பகுதிகளில் சிறிய தொட்டிகளில் மழை நீரை சேகரித்து உபயோகிக்க இயலும். ஆனால் வருடத்தில் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் மட்டுமே மழை பெய்யும் பகுதிகளில் ஆண்டு முழுவதும் மழை நீரை உபயோகிக்க வேண்டுமெனில், அதிக அளவு கொள்ளளவு கொண்ட பெரிய தொட்டிகள் தேவைப்படும். எனவே, மழை நீரை பூமிக்குள் செலுத்துவதால் கிடைக்கக்கூடிய நன்மைகளைக் கருத்தில் கொண்டால் இம்முறையே சிறந்ததாகும்.

**மழை நீர் சேகரிப்பு முறைகள்**

மழை நீரை இருவகையாக சேகரிக்கலாம்.

அ) கட்டிட மொட்டை மாடியில் பெய்யும் மழை நீர் - திறந்த வெளிக் கிணறுகள் மூலம் சேகரித்தல் மற்றும் குழாய்க் கிணறுகள் மூலம் சேகரித்தல்

ஆ) கட்டிடங்களைச் சுற்றியுள்ள திறந்த வெளிப் பகுதிகளில் பெய்யும் மழை நீர்

மேலும் மழை நீரை கீழ்க்கண்ட எளிய அதிக செலவில்லாத முறைகளில் சேகரித்து நிலத்தினுள் ஊடுருவச் செய்து நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கலாம்.

அ) கசிவு நீர்க் குழிகள் மற்றும் கசிவு நீர்ப் படுகைகள் மூலம் சேகரித்தல்

ஆ) துளைகளுள்ள கசிவு நீர்க் குழிகள் முறை மூலம் நீருட்டல் கிணறு (குறைந்த விட்டம், குறைந்த ஆழம்) அமைத்து சேகரிக்கலாம்.

**கூரை மற்றும் குடிசையில் விழும் மழை நீர் சேகரித்தல்**

- வீட்டுக் கூரையின் மேல் விழும் மழை நீரை, மழை நீர் கொண்டு வரும் வடிகுழாய் மூலம் கொணர்ந்து மணல் வடிப்பானில் செலுத்தி அதன் மூலம் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை, தண்ணீர்த் தொட்டியில்சேமித்து உபயோகிக்கலாம்.
- குடிசை வீடாக இருந்தால் கூரையின் மேல் பாலீதின் மேல் விரிப்பு அமைத்து மழை நீரை சேகரிக்கலாம்.

❑ மேலும் விபரங்களுக்கு ❑

சமுதாய மேம்பாட்டு ஆலோசகர், சமுதாய மேம்பாட்டுத் திட்டம்,
விரிவாக்க சேவைத்துறை - சக்தி புரா, MCET - NPTC, பொள்ளாச்சி
போன் : 04259 : 236030 / 236040

# நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி,

சமுதாய மேம்பாட்டுத் திட்டம், பொள்ளாச்சி

# டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி

சக்தி புரா, விரிவாக்க சேவைத்துறை

# வாணவராயர் வேளாண்மைக் கல்லூரி

இணைந்து நடத்தும்

## மண் வளம் காக்கும் மண்புழு உரம் தயாரித்தல்

## இலவச தொழில்நுட்பப் பயிற்சி


### மண் வளம் காக்கும் மண்புழு உரம்

உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட பசுமை புரட்சி திட்டத்தின் கீழ் வேளாண் நிலங்களில் செயற்கையாய் தயாரிக்கப்படும் இரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால் மண்வளம் குன்றி, இயற்கை சூழல் பாதிப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருகிறது. ஆகையால் வேளாண் நடவடிக்கைகளில் நீடித்த நிலையான இலாபத்தை நீண்ட காலத்திற்கு பெற இயற்கை உரங்களை அதிகம் பயன்படுத்த வேண்டிய நிர்பந்தம் தற்போதைய சூழ்நிலையில் ஏற்பட்டுள்ளது.

நம்முன்னோர்கள் தொன்று தொட்டே கையாண்டு வந்த இயற்கை விவசாய முறை மீண்டும் ஆங்காங்கே சிறந்த முறையில் கையாளப்பட்டு வருகின்றது. சமீப காலமாக வேளாண் கழிவு, நகர் மற்றும் கிராமப்புற கழிவுகள், கயிறு மஞ்சிக்கழிவு, ஆலைக்கழிவுகள் மற்றும் விலங்குகளின் கழிவுகள் ஆகியவை மக்க வைக்கப்பட்டு இயற்கை உரமாக பயன்படுத்தப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மிகக் குறுகிய கால அளவில் தயாரிக்கக் கூடிய இயற்கை உரங்களில் மண்புழு உரம் மிகச் சிறப்பானதாக கருதப்படுகிறது.

### மண்புழு இனங்கள்

1. லேம்பிட்டோ மாருதி
2. பெரியானிக்ஸ் எக்ஸ்வேட்டஸ் (ஆப்பிரிக்க இனம்)
3. யூட்ரிலஸ் யூஜினியே
4. ஐசீனியா போய்ட்டிடா (சைனா இனம்)



### மண்புழு உரத்தின் சிறப்புகள்

- மண்ணின் மிருதுவான தன்மையை அதிகரிக்கின்றது.
- பயிருக்கு தேவையான ஆக்ஸிஜனை வேர்பகுதியில் கிடைக்கச் செய்கிறது
- மண்ணின் ஈரப்பதம் மற்றும் நீர்பிடிப்புத் தன்மையை பராமரிக்க உதவுகிறது
- மண்ணில் உள்ள ஊட்டச்சத்து இழப்பை ஈடுகட்டுகிறது.
- வேளாண் கழிவு, நகர் மற்றும் கிராமப்புற கழிவுகள், கயிறு மஞ்சிக்கழிவு, ஆலைக்கழிவுகள் மற்றும் விலங்குகளின் கழிவுகளை உரமாக மாற்ற உதவுகிறது.
- தரிசு நிலங்களை மேம்படுத்த உதவுகிறது.
- மண்ணின் இரசாயன பௌதீக குணங்கள், கார அமில தன்மையை நிலையாக வைக்க உதவுகிறது.

| | | |
|---|---|---|
| பயிற்சி துவக்க நாள் | : | 19.07.2014 |
| இடம் | : | ABT திருமண மண்டபம், ஆனைமலை |
| தலைமை | : | திரு சாந்தலிங்ககுமார், ஊராட்சிமன்றத் தலைவர், ஆனைமலை |
| பயிற்சி வழங்குபவர்கள் | : | முனைவர் S.கிருஷ்ணக்குமார், உதவிப் பேராசிரியர்<br>முனைவர் K.வீரமணி, உதவிப் பேராசிரியர், VIA மணக்கடவு |

இம்முகாமில் அனைத்து விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடைய வேண்டுகிறோம்.

☆ மேலும் விபரங்களுக்கு ☆

சமுதாய மேம்பாட்டு ஆலோசகர், சமுதாய மேம்பாட்டுத் திட்டம்,
விரிவாக்க சேவைத்துறை - சக்தி புரா, MCET - NPTC, பொள்ளாச்சி
போன்: 04259 : 236030/236040

**நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி**

சமுதாய மேம்பாட்டுத் திட்டம், பொள்ளாச்சி,

**டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி**

சக்தி புரா – விரிவாக்க சேவைத்துறை மற்றும்

அறிவியல் தொழில்நுட்பத் துறை திட்டம்

**வானவராயர் வேளாண்மைக் கல்லூரி**

*இணைந்து நடத்தும்*

# வெர்ஜின் தேங்காய் எண்ணெய் தயாரித்தல்
# இலவச தொழில்நுட்பப் பயிற்சி

தென்னை என்ற வார்த்தை கற்பக விருட்சம் என்ற சமஸ்கிருத மொழி வாயிலாக அழைக்கப்படுகிறது. பெயருக்கேற்ப தென்னையின் அனைத்து பொருள்களும் மனித வாழ்க்கைக்கு தேவையானவையாகும். தென்னையின் வாழ்நாள் என்பது நூற்றாண்டை நெருங்கும். ஆனால் இயற்கை சீற்றம் மட்டுமே இதன் வாழ்நாளில் முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

இந்தியாவை பொருத்தவரையில் 18 மாநிலங்கள், மூன்று யூனியன் பிரதேசங்களை சேர்ந்து மொத்தம் 1.935 மில்லியன் ஹெக்டேர் பயிரிடப்படுகிறது. இதில் தமிழகத்தை கணக்கிடுகையில் சுமார் 6200 மில்லியன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 35./. கொப்பரை தயாரிக்க பயனாகிறது. கொப்பரையிலிருந்து எண்ணெயானது பெரும்பகுதி வெப்ப ஆற்றல் செயல்பாட்டினால் பிரித்தெடுக்கப்படுகிறது. இதனால் அதிலுள்ள இயற்கை ஊட்டச்சத்துக்கள் சிதைந்து போகிறது. ஆகவே, இந்த எண்ணெய் உணவு தயாரித்தல், தொழிற்சாலை மற்றும் சோப்பு தயாரிக்கும் பணிகளில் பயன்படுத்தப்படுகிறது. பரிசுத்த தேங்காய் எண்ணெய் என்பது வெப்ப ஆற்றல் பயன்படுத்தாமல் எளிதான முறையில் பிரித்தெடுப்பதால் இதன் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைவானதாக உள்ளது.மேலும் மருத்துவ பயன்பாடுகள் மற்றும் உணவில் முதல் இடத்தை பெறுகிறது.

**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| 1. முதிர்ந்த தேங்காய்கள் | 2. வடிகட்டி | 3. தேங்காய் திருகு கருவி |
| 4. தேங்காய் பால் பிரிக்கும் கருவி | 5. கதர் துணி | 6. உணவு பதப்படுத்தும் பிளாஸ்டிக் கலன்கள் |

**பரிசுத்த தேங்காய் எண்ணெயின் சிறப்பம்சங்கள்**

1. தேங்காய் எண்ணெயில் எளிதில் ஜீரணமாகக் கூடிய எளிய கொழுப்பு அமிலங்களை கொண்டுள்ளது.
2. ஒரு தேக்கரண்டி அளவு வீதம் இருவேளை எடுத்துக் கொள்ளும் போது வயிற்று சதை பெருத்தலை கட்டுப்படுத்துகிறது.
3. உணவோடு எண்ணெய் சேர்க்கும் பொழுது பாக்டீரியா, கேண்டிடா மற்றும் ஒட்டுண்ணி ஆகியவற்றால் ஏற்படும் ஜீரண கோளாறுகளை சரி செய்கிறது.
4. இரண்டாம் நிலை சர்க்கரை நோய் குறைபாடு உள்ளவரின் இன்சுலின் குறைபாட்டை நீக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.
5. அதிக வெப்பநிலையிலும் ஆக்ஸிகரணமடைவது தேங்காய் எண்ணெயில் குறைவு என்பதால், புற்றுநோய் காரணி தடை செய்யப்படுகிறது.

☆ மேலும் விபரங்களுக்கு ☆

சமுதாய மேம்பாட்டு ஆலோசகர், சமுதாய மேம்பாட்டுத் திட்டம்,
விரிவாக்க சேவைத்துறை - சக்தி புரா, MCET - NPTC, பொள்ளாச்சி
போன் : 04259 : 236030 / 236040